300 படையினர் 'மனிதப் புதைகுழிக்கு' காவல்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 26 இதழ் 328
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10-1-1994

(இரத்தினபுரி)

'சூரியகந்த' மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்ட பகுதிகளில் 300க்கு மேற்பட்ட பொலிஸ் படையினரும் பல இராணுவப் பொலிசாரும் பாதுகாப்புக் கடமை

(2ம் பக்கம் பார்க்க)

அரசு தொடர்ந்து மௌனம் சாதிப்பு

(தொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதை குழி பற்றியோ இது பற்றி விசாரணை நடாத்தும் படி எழுப்பப்படும் குரல்கள் குறித்தோ அரசு இதுவரை எதுவும் கூறாது மௌனம் சாதித்து வருகிறது.

எப்படியாவது இந்த விவகாரத்தை இருட்டடிப்புச் செய்ய முயன்ற அரசு தனது சில நடவடிக்கைகளாலேயே இப் பிரச்னையை பெரிதாக்கி விட்டதாம்.

இப் பிரச்னை அரசுக்கு உள் நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் பெரும் அவப் பெயரையும் நெருக்கடியையும் ஏற்படுத்தத் தொடங்கி விட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (சி)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகு சேவை இன்றும், நாளையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் இந்த நடைமுறை இனிமேல் ஒவ்வொரு வாரமும் இருக்குமெனவும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது. (சி)

சூரியகந்த பயங்கரம்; நேற்று மனிதப் புதைகுழியில் இருந்து 20 எலும்புக்கூடுகள் மீட்பு

தோண்டும் முயற்சி தொடர்கிறது

(தொழும்பு)

சூரியகந்த பகுதியில் கடந்த 3ம் திகதி 15 எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழியிலிருந்து மீண்டும் நேற்று முன்தினம் காலை முதல் மாலைவரை 20 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் எலும்புக்கூடுகள் எதிர்க் கட்சி அரசியல்வாதிகளால் கண்டுபிடிக்கப்பட்டுவருகிறது.

எம்பிலிப்பிட்டிய நீதவான் பகுதியில் பத்திரிகையாளர் முன்னிலையில் இவ்வேலை நடைபெற்றது.

பியசேனாவின் முன்னிலையில் கல்வி, அரசியல்வாதிகள், பொது நேற்றுமுன்தினம் காலை 10 அமைப்புகளின் பிரதிநிதிகள் மணி முதல் 4 மணிவரை இப் மற்றும் நூற்றுக்கணக்கானோர் இதன்போது குறிப்பிட

(4ம் பக்கம் பார்க்க

உதவி கேட்டு அழுது அலறும் குழந்தையின் எலும்புக்கூடு

(தொழும்பு)

'சூரியகந்த' பகுதியில் நீதவான் முன்னிலையில் குழி தோண்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது ஒரு எலும்பு எல்லோரும் அதிர்ச்சியடைந்து செயலிழந்து நின்றனர்.

கீழே திறந்த தாடையுடனும், நீண்டிய கைகளுடனும் உதவி கேட்டு அழுது அலறுவது போன்ற ஒரு பரிதாபகரமான தோற்றத்துடன் காட்சி தந்தது ஒரு குழந்தையின் எலும்புக்கூடு. அவ்வாறானதொரு அவல நிலையில் அக்குழந்தை கொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறான பல நிலைகளிலும் பல எலும்புக்கூடுகள்

(4ம் பக்கம் பார்க்க)

அரச படையினரின் கொலை மயானம்

(தொழும்பு)

1987ம் ஆண்டுமும் 91ம் ஆண்டுக்குமிடையே அரசுக் கெதிராக நடந்த கிளர்ச்சியை அடக்கிய 'அரசு மரண அதிரடிப் படைகளி' இந்தப் பகுதிகளை மயானமாகப் பாவித்

(4-ம் பக்கம் பார்க்க)

காஞ்சிப் பெரியார் மகா சமாதியானார்

(சென்னை)

காஞ்சியில் நேற்றுமுன்தினம் முக்தியடைந்த காஞ்சிப் பெரியவரின் திருமேனி வேதமந்திரங்கள் முழங்க, லட்சக்கணக்கானவர்களின் பரவச ஒலிக்கிடையே நேற்று மாலை 4-15மணிக்கு மகாசமாதியில் வைக்கப்பட்டது.

காஞ்சிப் பெரியவரின் திருமேனிக்கு முதலில் மகாபிஷேகமும், தெய்வ ஆராதனையும் நடைபெற்றது. கங்கை, காவேரி, யமுனை ஆகிய புண்ணிய நதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித நீராலும் பூக்களாலும் வாசனைத் திர

(2-ம் பக்கம் பார்க்க)

சிறு பிள்ளைகளின் சண்டையே கோரக் கொலைக்கு காரணம்?

(தொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பட்டசாலையின் தலைமை ஆசிரியரின் மனைவிக்கும் வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளுக்கும் இடையே ஏற்பட்ட சிறு பூசல்

ளுக்காக, பாடசாலை மாணவர்களிடையே ஏற்பட்ட சிறு சண்டைக்காக மட்டுமே படையினரால் கடத்திச்செல்லப்பட்டு இந்தப் பிள்ளைகள் (31 மாணவர்கள்) கொல்லப்

பட்டுள்ளனரா?

இந்தப் புதைகுழிகளில் இளம்பிள்ளைகளின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது 31 மாணவர்களும்

(4ம் பக்கம் பார்க்க)

'மா'வுடன் 'மாகோ' நேற்று வந்தது

(நெலியடி)

3,193 மெற்றிக் தொன் 'மா' வுடன் நேற்று நண்பகல் 'மாகோ' கப்பல் பருத்தித்துறை துறைமுகம் வந்து சேர்ந்தது.

'மா' இறக்கும் பணி உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டது. நேற்று மாலை வரை 180 மெ.தொன் மா இறக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து வாழ்.மாவட்டத்திற் 'மா' விற்கு ஏற்பட்ட பெருமளவு தட்டுப்பாடு ஓரளவிற்கு நீங்குமென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மா, மண்

(4ம் பக்கம் பார்க்க)

மூன்று மனிதப் புதைகுழிகள் இருப்பதாக இரகசியத் தகவல்

(தொழும்பு)

'சூரியகந்த' பகுதியில் மூன்றிற்கும் மேற்பட்ட பாரிய மனிதப் புதைகுழிகள் இருப்பதாக தமக்கு நம்பகரமான தகவல் கிடைத்திருப்பதாக சுதந்திரக்கட்சி எம். பி யான திரு. மகிந்த சமரவீர பி. பி. ஸி. யின் தெற்கிலுள்ள சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; கிறிஸ்மஸ்தினத்திற்கு பத்து நாட்களுக்கு முன் எங்களுக்கு ஒரு இரகசியத் தகவல் வந்தது. அந்த தகவலில், சூரியகந்த பகுதியில் பாரிய மனிதப் புதைகுழி ஒன்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்ததுமேலும் புதைகுழி இருந்த பகுதியின் வரை படமும் அத்தகவல் தந்தவரால் எமக்கு தரப்பட்டது;

மேலும் இப்பகுதியில் மூன்று பாரிய மனித புதைகுழி இருப்

(4-ம் பக்கம் பார்க்க)

'எயிட்ஸ்' நோய்க்கு இலங்கையில் மருந்து?

(தொழும்பு)

'எய்ட்ஸ்' நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு உகந்தது எனக் கருதப்படும் மருந்து ஒன்றினை இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 4 ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனை இம்மருந்தினை பரீசித்துப்பார்க்கும் சந்தர்ப்பம் தமக்கு இதுவரையில் கிடைக்கவில்லையெனவும் இவ்ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இவ்ஆராய்ச்சியின் விபரங்களை தந்தவுமாறு பிரிட்டனைச் சேர்ந்த மருந்தவ ஆய்வு நிறுவனம் ஒன்று இந்த ஆராய்ச்சியாளர்

(2-ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

மாணவர்களும் நடிக்கலாம்

அராலியூர் சுந்தரப்பிள்ளை நாடகங்களை பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. பலர் மேடையில் நடித்துவிட்டனர். மாணவர்களும் நடிக்கலாம். முதலாம்பிள்ளை 30/-. பூபாலசிங்கம் புத்தகசாலை.

(வி-693)

தவறிவிட்டது

எனது முக்கிய தஸ்தாவேஜுகள் கந்த உறையுடன் வெலிங்டன் சந்திக்கும், ஆஸ்பத்திரி பின் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். அ. ஸ்ரீதரன், சதுமலை வைத்திலம், சுதுமலை, ஆனைக்கோட்டை. (வி-709)

தேவை

தமிழ், ஆங்கிலம், இலக்கியம், இலக்கணம், சரித்திரம் அரசியல் ஆகியவற்றில் திறமையுள்ள இளைப்பாறிய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புத்தகங்கள் எழுதி அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சகல விபரங்களுடன் 14-1-94க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். விளம்பர இலக்கம்: எ - 3741, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(எ-3741)

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். அக்கவேலி மாவிந்தி மகளைப் பரிசளிப்பு விழா 12-ம் திகதி புதன்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரி திறந்த வெளியரங்கில் அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெறும்.

கோழிகளுக்கு நோய்த்தடுப்பு

(உடுவில்)

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் சண்டிவிப்பாயில் உள்ள சங்கரனை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கோழிகளுக்கான நோய்த் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. (109)

இலக்கிய சந்திப்பு

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ்மா மன்றம் அண்மையில் மன்றக்காப்பாளர் கவிஞர் இருவை க. ஜீவமோகன் தலைமையில் தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சனர்கள், ஓவியர்கள், நடிகர்கள், சுவைஞர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து ஓர் இலக்கியசந்திப்பை சக்தி மண்டபத்தில் நடாத்தினர். (154)

கணித மூலவள நிலைய திறப்பு விழா

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கணித மூலவள நிலையத் திறப்புவிழா நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமை வகித்தார்.

கணித மூலவள நிலையத்தை யாழ். வடக்கு கல்வி பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி திறந்துவைத்தார். (160)

பாலம் திருத்த ஏற்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை — சாவகச்சேரி வீதியில் கப்புதூக்கி உள்ள ஐந்து கண் பாலம் திருத்தி புனரமைக்கப்படவுள்ளது. —52

தெருக்கூத்து

(ஆனைப்பந்தி)

தற்போது நடைபெற்று வரும் தமிழீழ விடுதலைப் போரிலே அனைவரும் இணைந்து கொள்ளவேண்டும் என்பதை விளக்கும் வகையில் விடுதலைப்புலிகள் என்ற பண்பாட்டுக்கழகத் தீவகப் பிரிவினரால் 'புறப்படுங்கள் போருக்கு' என்னும் தெருக்கூத்து நடாத்தப்பட்டு வருகின்றது. —101

கல்லூரி இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் கடந்த ஒரு வருட காலமாக இயங்கி வந்த பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி கடந்த 3ம் திகதி திங்கள்கிழமை தொடக்கம் வடலி வடைப்பு பிரதான வீதியிலுள்ள இரு தனியார் வீடுகளில் செயற்படுவருகின்றது. (72)

புதிய கோட்ட கல்வி அலுவலகம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான புதிய கோட்டக் கல்வி அலுவலகம் விரைவில் திறந்து வைக்கப்படுமென கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. கல்வித்திணைக்கள திட்டத்தின் கீழ் இப் புதிய வடமராட்சி கிழக்கு கல்வி கோட்டத்திற்கான இப்புதிய அலுவலகம் திறந்து வைக்கப்படுகிறது. (52)

பெரியமடுவில் பனைவிதை நடுகை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் நடைமுறைப்படுத்தப்படுவரும் பனை நடுகைத் திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரியமடு என்னும் இடத்தில் 6000 பனை விதைகள் நாட்டப்படுவுள்ளன.

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி பெரியமடு பிரதான வீதியில் இருமருங்கிலும் அப்பகுதி மக்களினூடாக இவ்விதைகளை நாட்டியுள்ளது.

குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

காலபோக நெற்செய்கையை அதிகரிக்கும் நோக்குடன் வவுனியாக் கோட்டத்திலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மக்களையும் இணைத்து பல வேறு குளக் புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த நடவடிக்கைகளின் போது குளக்கட்டுகளிலுள்ள மந்தக் காடுகள் வெட்டப்பட்டு ஆழமாக்கப்பட்டும் உள்ளன.

வவுனியா கோட்டத்திலே ஓமந்தை, நகரப்பகுதி, பூவரசங்குளம், நெடுங்கேணி, வடக்கு இருக்கும் சிறு குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குள புனரமைப்பு வேலைகளுக்கு ரூபா இரண்டு இலட்சத்து எழுபதினாயிரத்து எழுநூற்றி இருபத்தைந்து பெறுமதியுடைய மனித வலு பயன்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இறைவனுடன் இரண்டறக் கலந்த "தெய்வத்தின் குரல்"

நினைத்தாலே புண்ணியம் என்பது மிகைமொழியல்ல. நூற்றுக்கு நூறும் மெய் ஸ்ரீகாஞ்சி காமகோடி மூத்த சங்கராச்சாரிய சுவாமிகளான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளை நினைத்தாலே புண்ணியம் என்றநிலை நேற்றுமுன் தினத்துடன் நிறைவுபெற்று விட்டது.

நூறு நீண்ட நெடிய ஆண்டுகள் பிரமச்சரியத்திலும், பிரம்ம ஞானத்திலும், பிரேம பக்தியிலும், பரமகருணையிலும், தோய்ந்தோன் அப்பழுக்கற்ற புண்ணிய வாழ்வினரை நினைத்த மாத்திரத்திலே மட்டுமல்ல, தரிசித்தும் புண்ணியம் பெற்றோர் ஆயிரம்பேர். அத்தனைபேரும் சோகம் தோய்ந்துள்ளனர்.

மஹாபுருஷர்களுக்கு அவருக்கென்று சிறப்பு மரபுகளுண்டு. தர்மசாஸ்திரத்தின் கடும் கட்டுப்பாடுகளினின்றும் இம்மியும் வழுவாத ஆசார சீலம், தபோமகிமை. வேதவேதாந்த வேதாங்க மந்திர யோக ஆகம சாஸ்திரங்களின் சுயானுபூதி சார்ந்த அறிவு. இவைமட்டுமன்றி சகல கலைகளிலும் அறிவியல் துறைகளிலும் அன்றாட வாழ்விலும் கூட நுண்ணிய விஷயஞானம். தனக்கென வாழாது தரணியை வாழ்விக்கும் தியாக சீலம். அந்தவழியில் ஆயிரம் ஆயிரம் மைல்கள் சேதமடைந்து பாரதத்தின் மூலைமுடுக்குகளெல்லாம் வேத தர்மம் நிலைகொள்ள வழிவகுத்த "தெய்வத்தின் குரல்" இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டது.

பெரியாரிடம் தனித்தன்மை வாய்ந்த அம்சம் காரணம் பாராது கருணை பாராட்டும் அருளாளரான அவர் தர்ம சாஸ்திரபீடங்களிக் கலை கிறந்த காமகோடி பீடத்தின் ஆசார்யராக இருந்ததால் ஏற்பட்ட தனித்தன்மை எனலாம். அருளாளர் என்ற முறையில் அவர் தம்முடைய கருணையைக் குறைவறப் பொழிந்து இரங்கித்தார். ஆசார்யர் என்ற முறையில் சாஸ்திரவரம்பை உள்ளபோதோ தமது ஆள

காஞ்சிப் பெரியவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விலகல், பரக, தேன் போன்றவற்றாலும் இந்த அபிஷேகங்கள் பல மணி நேரம் நடைபெற்றது.

இந்த அபிஷேகத்திற்கு பின் 108 தங்கக் காசுகள் பெரியவரின் திருமேனியில் மலராகச் சொரிந்து அபிஷேகம் செய்யப்பட்டது. நாட்டின் வேறு பகுதிகளிலிருந்தும் பெரியவரைத் தரிசிப்பதற்காக எதிர்க்கணக்கான மக்கள் நேற்று காஞ்சிபுரத்தில் கூடியிருந்தனர். இதில் இஸ்லாமியர், கிறிஸ்தவர்களும் கூட ஆயிரக்கணக்கில் வந்து கொண்டனர்.

சங்கர மடத்தின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் அமர்ந்த நிலையில் முதலில் வைக்கப்பட்டிருந்த பெரியவரின் திருமேனியைக் காணவும் அஞ்சலி செலுத்தவும் பல ஆயிரக்கணக்கானோர் கியூவில் காத்திருந்தனர்.

வேத மந்திரங்களும், தேவாரம், திருவாசகங்களும் அங்கு இடைவிடாது ஓதப்பட்டது பக்திப் பாடல்களும் பஜனைகளும் நடைபெற்றன. நாட்டின் பல்வேறு கோவில்களிலுமிருந்தும் கொண்டுவரப்பட்ட பொன்னாடைகளும், பிரசாதங்களும், காஞ்சி அருள்மிகு காமாட்சி அம்மன் ஆலயத்திலிருந்து யானை மீது ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு பெரியவரின் திருமேனியில் சாத்தப்பட்டது.

பல்வேறு மதங்களின் சார்பிலும், மத நிறுவனங்களின் சார்பிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. காஞ்சி மடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகளும், விஜயேந்திர சுவாமிகளும் பரமாச்சாரியாரின் அருகில் அமர்ந்திருந்தனர்.

மகா சமாதி பூசை பி. ப. 3-30 மணியளவில் ஆரம்பமானது. காஞ்சி பெரியவரின் மகா சமாதியில் அமைந்த சங்கர மடத்திலுள்ள 'பிர்லா' மண்டபத்தில் 12 அடி ஆழமுள்ள பள்ளம் கொன்ற பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூசையின் பின் பெரியவரின் திருமேனி பள்ளத்தில் வைக்கப்பட்டிருந்த பெரிய மூங்கில் கூடையில் அமர்ந்த நிலையிலேயே சமாதியாக வைக்கப்பட்டது.

பெரியவர் உட்கார்ந்திருந்த நிலையிலேயே 3 அடி விட்டமுள்ள மூங்கில் கூடையில் வைக்கப்பட்டார். அவர்பயன்படுத்திய பொருட்களும் தங்க நாணயம், நவரத்தினம் பட்டு போன்றவையும் அதில் வைக்கப்பட்டன. சுபால மோக்ஷத்திற்காக அவரது நிலையில் தேங்காய் உடைக்கப்பட்டது. உச்சந்தலையில் அவர் பூசைக்கு பயன்படுத்திய 'காஷாகிரவாள்' வைக்கப்பட்டது அவரை வைத்திருந்த தண்டும் மூங்கு முறிக்கப்பட்டு கூடையில் வைக்கப்பட்டது கூடைமுழுவதும் உப்பால் நிரப்பப்பட்ட பின் மணல் கொண்டு இப்பள்ளம் மூடப்பட்டது.

பெரியவரின் சமாதியைத் தரிசிக்க இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ், முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன், தமிழக ஆளுநர் திரு. சென்னாரெட்டி, தலைமை நீதிபதி அதிகாரி திரு. ரி. எஸ். சேஷன் உட்பட மத்திய, மாநில அரசுகளின் பெருமளவில் கலந்து கொண்டனர். -வி

எயிட்ஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவனம் கோரியுள்ளது.

இதேவேளை மலேரியா நோய்க்கு எதிரான மருந்தினை தயாரிக்கும்முயற்சியில் ஆஸ்திரேலிய மருத்துவ ஆய்வுக்குழு ஈடுபட்டுவருகிறது. மலேரியா நோயினால் வருடாந்தம் 20 லட்சம் பேர் மரணிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-சி)

300 படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபடுத்தப்பட்டனர் என்று 'தினமின' பத்திரிகையின் செய்தியாளர் விக்கிரமபுர தெரிவித்துள்ளார்.

அவர் நேர்முகமாக சூரிய கந்தவுக்கு சென்று அங்கு நடந்தவைகளை பி. பி. சி. கிளை சேவைக்கு எடுத்துக் கூறுகையில்:

1988-ம் 89 ஆண்டுக் காலத்தில் அரசாங்கத்துக்கு எதிராகக் செயல்பட்ட இளைஞர்களை அரசாங்கம் கொல்லச் செய்து இந்தப் புதை குழிகளில் புதைத்துள்ளது. ஜனவரி 3-ம் திகதி முதல் முதலாக இந்தப் புதைகுழிகளில் மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. 2-வது தடவையாக நேற்று எம்பிலிப்பிட்டியா நீதவான் பியசேனாவின் விசாரணை சூரியகந்தவில் ஆரம்பமாகியது.

இந்த நேரத்தில் எம்பிலிப்பிட்டியவில் காணாமற்போன மாணவர்களும் மற்றும் காணாமற்போன இளைஞர்களின் பெற்றோர்கள் என்று நூற்றுக் கணக்கில் சூரிய கந்தவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். இவர்களையும் பத்திரிகையாளர்களையும் பொலிசார் அங்கு போகாது தடை செய்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் கூட பிரவேசிக்க முடியாமல் இருந்தது.

பின்பு உண்மை நிலையை பொலிசாருக்கு எடுத்துக் கூறியதன்பின் அவர்கள் எங்களை அந்த இடத்துக்கு போக அனுமதித்தார்கள்.

20 இளைஞர்களின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பற்றிக் சாரம், பிஜாமா சாரம், நைலோன் நூல், சாப்பாத்து நூல்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த எலும்புக் கூடுகள் நீதவானின் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சூரிய கந்தவின் மனித எலும்புக் கூடுகள் பற்றி ஒப்சேவர் பத்திரிகை இதுவரை எந்தச் செய்தியும் வெளியிடவில்லை. ஆனால் அங்கு நடந்த வேறு ஒரு சம்பவத்தை பெரிதுபடுத்தி முதல் பக்கத்தில் செய்தியை பிரசுரித்துள்ளார்கள் என்றும் கூறினர். (ம-சி)

இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன், தமிழக ஆளுநர் திரு. சென்னாரெட்டி, தலைமை நீதிபதி அதிகாரி திரு. ரி. எஸ். சேஷன் உட்பட மத்திய, மாநில அரசுகளின் பெருமளவில் கலந்து கொண்டனர். -வி

மணிவாக்கு

மனதுக்கு இரண்டு நிலைகள் உண்டு; பிரேமை ஏற்பட்டால் மனம் மிகவும் மென்மையாக இருக்கும்; துவேஷம் ஏற்பட்டால் மனம் மிகவும் வடிவமாகும்.

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

நமது நோக்கு

ஆண்டுகள் இருபதுக்கு முன்

பொலிஸ் துப்பாக்கிகள் வெடித்தன; சன்னங்கள் சீறிப் பறந்தன; மின்கம்பிகளிற் பட்டன; கம்பிகள் அறுந்தன! விளைவு? எதிர்பாராத மின் தாக்குதலால் அப்பாவிப் பொதுமக்கள் ஒன்பது பேர் பலி! மக்கள் சிதறி ஓட, அக்லோலக் கல்லோலப்பட்டனர்!

10-1-1974ல், யாழ். முற்றவெளியில் நான்காவது தமிழாராய்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியின் போது இந்த அட்டூழியம் அரங்கேறியது.

"நிராயுதபாணிகளான மக்கள்மீது, எந்த விதத்திலும் அவசியமற்ற பலாத்காரம் பிரயோகித்ததற்காகப் பொலிசாரே குற்றவாளிகளாகின்றனர் என்று தவிர்க்க முடியாத முடிவுக்குத்தான் நாங்கள் வரவேண்டியவர்களாக இருக்கிறோம்!"

இப்படித் தெரிவித்தது, இச்சம்பவம் பற்றிப் பொதுமக்கள் சார்பாக விசாரணை நடத்திய ஆணைக்குழு. ஓய்வுபெற்ற நீதியரசர்களான கிறெஸ்டர், வீ. மாணிக்கவாசகர், பேராசிரியர் சூலேந்திரன் ஆகியோரைக் கொண்டதே அந்த ஆணைக்குழு.

2-1-68 முதல் சென்னையில் நடைபெற்றது இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாடு. அண்ணாத்துரை பதவியேற்ற கில மாதங்களில் மிகக்கோலாகலமாக நடைபெற்ற அந்த மாநாடு தமிழர்களின் எழுச்சி விழாவாக மாறியது உலகறிந்த உண்மை.

எனவே, அந்த வகை மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை இலங்கை அரசு அரசியல் ரீதியாக வரவேற்கவில்லை. ஆரம்பம் முதலே மறைமுகமாக எதிர்ப்புகள்; முட்டுக்கட்டைகள்!

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் விமான நிலையத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டனர்; மாநாடு நடந்திருந்த மண்டபப் பாவனைக்கு அனுமதி மறுப்பு!

இறுதி நேரத்திற் கில சமசா முயற்சிகள் வெற்றி அளித்தன.

நூற்றுக்கு மேற்பட்ட ஊர்திகள் பவனி, கலை நிகழ்ச்சிகள், வண்டிச் சவாரிப் போட்டி, அலங்கார வளைவுகள்- இப்படிப் பல நிகழ்வுகள் மக்கள் எழுச்சியை எடுத்துக் காட்டின.

இறுதி நாளிற் நடந்த துயரச் சம்பவம், ஆட்சியாளரின் மனக்கொதிப்பின் பிரதிபலிப்பே.

இறந்தவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் பல நடுவைகள் கிறைக்கப்பட்டன.

ஆனால், மக்கள் உள்வத்தில் விடிவுக்கான உணர்ச்சி சிதைக்கப்பட முடியவில்லை!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்

தோற்றமும் வளர்ச்சியும்

தமிழர் பெருமையைத் தரணி எங்கும் விளங்கிவரும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் தோன்றி முப்பது ஆண்டுகள் ஆகின்றன. சற்றுப் பின்நோக்கிப் பார்ப்போமா!

1964 இனவரியில் டில்லியில் கிழைத்தேயப் பண்பாட்டு ஆய்வாளர் மாநாடு ஒன்று நடந்தது. அதில் பங்குபற்றிய தமிழ் ஆராய்ச்சியாளர்களைத் தனியாக அழைத்து, கலந்தாலோசித்து அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை ஆரம்பித்து வைத்த பெருமை அக்கு சென்றிருந்த தவத்திரு தனிநாயகஅடிகளையே சாரும்.

இலங்கையிலிருந்து சென்ற பேராசிரியர்களும்ஏனைய பிரதிநிதிகளும் பலபலமாக இருந்தார்கள்.

மலேசியப் பல்கலைக்கழகத்திற் பணியாற்றிக்கொண்டிருந்த அடிகளார், முதலாவது தமிழராய்ச்சி மாநாட்டினை 1966 ஏப்ரல் 16 — 23 ஆம் திகதிகளில் கோலாலம்பூரில் வெகு கோலாகலமாகவே நடத்தினார். பல நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்கள், பிரதிநிதிகள் சென்றார்கள்.

அந்த மாநாடு வெறும் பிரசாரப்பேச்சு மேடையாக அமையவில்லை. ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப்பட்டன. அரங்குகள் வகுக்கப்பட்டன. கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன, குறிப்புகள் எடுக்கப்பட்டன. மறுநாளே அக்குறிப்புகள் அச்சிட்டுப் பரிமாறப்பட்டன.

தேர்தலில் தோல்வியுற்ற காங்கிரஸ் கட்சியாலும் மத்திய அரசாலும் இந்த எழுச்சி பூரணமாக வரவேற்கப்படவில்லை. இதற்கு ஒருகிறு சம்பவத்தையே சுட்டிக்காட்டலாம். தமிழராய்ச்சி மாநாடு நினைவாக வெளியிடப்படவிருந்த முத்திரையில் தமிழ்இடம் பெறவில்லை. இந்தியும் ஆங்கிலமுமே இடம்பெற்றிருந்தன.

யுனெஸ்கோவில் இலங்குநாயகம் வலாநிதி மா. க. ஆதிசேஷையா மாநாட்டிற் கலந்துகொண்டு ஆதரவை வழங்கியதும் நினைவிற்கொள்ளவேண்டியதாகும்.

தனிநாயகஅடிகளின் நெருங்கிய நண்பராக இருந்த 'ஈழநாடு' ஸ்தாபகர் வே. கி. தங்கராசா அவர்கள் அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்ற இயக்குனராகப் பணியாற்றிப் பல்வேறு கட்சியினரையும் மதத் தலைவர்களையும் இனத்தவர்களையும் ஒரே அணியிற் கொண்டு வந்ததையும் மறக்க முடியாததாகும்.

மூன்றாவது மாநாடு பாரிசில் 1970 ஜூலை 15 முதல் 18வரை நடைபெற்றது. பேராசிரியர் சீன் பிரியோசா முன்நின்று உழைத்தார்.

நான்காவது மாநாடு பெரிய சர்ச்சைகளுக்கிடையே யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரி 4 முதல் 10 வரை நடைபெற்றதும் இறுதிநாள் நிகழ்ச்சியின் போது நடைபெற்ற அசம்பாவிதங்களும் தனிக்கதைதானாகும்

ஐந்தாவது மாநாடு 1981ல் ஜனவரி 4 முதல் 10 வரை மதுரையில் எம். ஜி. ஆர். தலைமையில் எழுச்சிவிழாவாக அமைந்தது. எங்கும் அரசியற் சர்ச்சைகளுக் குறைவில்லை.

ஆறாவது மாநாடு மலேசியாவில் 1987 இலும், ஏழாவது மாநாடு மொரிசியசு நாட்டில் 1989 டிசம்பரிலும் நடைபெற்றன.

மயூரன்

மேற்நாட்டு ஆய்வுமுறைகளை வலையப்படுத்தமையினால் கருத்துக்கள் செம்மை பெற நிரந்தரமாகப் பதிவுப்பட உதவின.

இரண்டாவது மாநாடு சென்னையிலே 1968 ஜனவரி 4 முதல் 10 வரை முதலமைச்சராகப் பதவியேற்ற அண்ணாதுரையின் தலைமையில் நடந்தது. உலகத் தமிழர்களையே தட்டி எழுப்பிய எழுச்சி விழாவாக அமைந்தது.

யாழ். நகரில் நிகழ்ந்த

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு சம்பவம்

முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது

நான்காவது உலகத் தமிழராராய்ச்சி மாநாட்டின் போது இடம்பெற்ற சோக நிழ்வில் உயிர்நீத்தஒன்பது தியாகிகளின் நினைவு நாள் இன்று ஜனவரி 10-ம் திகதி வருகும்.

அன்று 1974-ம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி நடந்த சம்பவங்களே மனத்திரையில் விரிகின்றன.

யாழ். நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஒவ்வொரு வீதியில், வர்த்தக நிலையங்கள் முன்பும் வாழை மரங்கள், தாழை மரங்கள், சமுக மரங்கள் நாட்டப்பட்டு யாழ். நகர் எழிற்கோலத்தோடு மெருகூட்டப்பட்டிருந்தது. தோரணங்கள் கட்டப்பட்டு இடையிடையே ஒலிபெருக்கி அமைக்கப்பட்டு தமிழிசைக் கீதங்களும் ஒலித்த வண்ணமிருந்தன. மின்சாரக் கலர் 'பல்புகள்' அலங்கரிப்பும் அலாதியாகத்தான் இருந்தது.

அன்று மாலை நடைபெறவிருந்த மாநாடு யாழ். திறந்தவெளி அரங்கில் நடாத்துவதற்கு அனுமதி கிடைக்காததால் வீரசிங்கம் மண்டபத்துக்குள் நடப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மண்டபம் நிரம்பி வழிந்தது. கதவுகள் பூட்டப்பட்டு பேச்சாளர்கள் பேச ஆரம்பித்ததும் வெளியில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மண்டபத்தை நோக்கிச் சென்று தங்களையும் உள்ளே செல்ல அனுமதிக்குமாறு கேட்டனர். இதனால் விழா வளவு மண்டபத்திற்கு வெளியில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

விழா நடந்து கொண்டிருந்தது. முற்றவெளியில் இருந்து தபாற் கந்தோர் பக்கமாகச் சிறு சலசலப்பு. மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போக்குவரத்து இன்ஸ்பெக்டர் வழிவெல்லாம் திரண்டிருந்த மக்களினூடு தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்ளமுடியாது வந்த வழியே திரும்பிச் செல்கின்றார். காலைமணி நேரத்தின் பின்பு இன்ஸ்பெக்டர் சந்திர சேகர மைதானத்துக்கு வந்தார். அதன் பின்பு பலத்த பதற்றம் ஏற்பட்டது.

திடீரென கோட்டை ஆழிக்கருகில் கண்ணீர் புகைக் குண்டு ஒன்று வெடித்தது. மக்கள் கண்களைக் கசக்கியபடி நாலா பாகமாக ஓடினார்கள். தொடர்ந்து வெடிச்சத்தங்கள், துடியடிப் பிரயோகம் ஜனசமுத்திரத்தின் மத்தியில் ஐயோ, அம்மா என்ற அழுகுரல், அவலக்குரல் வானளாவிடையில் குழந்தைகளின் கீங்கிரல் கலந்தன.

மகரம்

மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தொண்டர்களின் உதவியால் வெளியேறிக் கொண்டிருந்தார்கள் மக்கள் ஓடும்போது விழுந்தும் அவர்களுக்கு மேல் மிதிபட்டுக்கொண்டுமிருந்தார்கள் பலர் வீரசிங்கம் மண்டபம் தபால் கந்தோர் ஆகியவற்றில் வைத்துப் பக்கமாகவுள்ள மதில் சுவர்களில் ஏறிக் குதித்துத் தப்பியோடினார்கள். பஸ் நிலையத்திலும் பொலிசாரினால் மக்கள் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஒன்பது பேர் பலியானார்கள். ஆசிரியர் கிறிமங்கம் அதிர்ச்சியினால் பூங்கா வுக்கருகில் சுருண்டு விழுந்து பலியானார். பலர் காயமடைந்தனர்.

அன்றிரவு 9 மணிக்குப் பின்னர் யாழ் நகர் வெறிச்சோடிக் கிடந்தது. ஆங்காங்கே பொலிசாரே வீதியில் நடமாடினார்கள். வீடு செல்ல போக்குவரத்து வசதியின்றி விழாவுக்கு வந்திருந்த வக்கள் ஆங்காங்கே அன்றிரவை கழித்தார்கள்.

இச்சம்பவத்தில் கி. நந்தகுமார் (14 வயது) சுழிபுரம் வி. தேவராசா (15 வயது) தொல்புரம், ஆ. கிளாதன் (10 வயது) நாச்சிமார் கோவில், தேவரதினம் (27 வயது) நாவன்மார்கட்டு, வீ. சோதிரதன் (28 வயது) கொடிகாமம், எஸ். பொன்னுத்துரை (54 வயது) கோப்பாய், ஆறுமுகம் (60 வயது) நாவன்மார்கட்டு, பி. சரவணபவன் பருத்தித்துறை ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். முதல்நாள் நடந்த அவலக்கரவலியின்போதும் இருவர் உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் 30 பேர் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மாநாட்டு அழைப்புக்குழுத் தலைவர் டாக்டர் சோமலெகாவின் மனைவி தேவரகூட பாதிப்புக்குள்ளானார். இச்சம்பவம் ஈழத்தமிழர் வரலாற்றில் முக்கியதிருப்பத்தை ஏற்படுத்தியதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது

இராசிபலன்

10 - 1 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு மார்கழி 26)

திரயோதசி: காலை 7-2 வரை, மூலம்: பின்னிரவு 3-22 வரை. இராகுகாலம்: காலை 8-3 முதல் 9-33 வரை, சுபநேரம்: நண்பகல் 12-33 முதல் 2-3 வரை, சித்தயோகம், கொர்ப்போரிட முடிவு.

மேடம்: காரிய தாமதம், தொழிற்போட்டி, பண முடை.

இடபம்: மனோமாற்றம், மனச்சஞ்சலம், உறவினர் துணை.

மிதுனம்: புத்திரர் செலவினங்கள், புதிய முதலீடு, குடும்ப சுகம்.

கடகம்: நல்ல வாய்ப்புக்கள், அதிக பிரயாசம், திருமண யோகம்.

சிங்கம்: பணப்பற்றாக்குறை, பெண்துயர், தொழிற் நஷ்டம்.

கன்னி: குடும்ப வேற்றுமை, பணத்தகராறு, ஆலோசனை.

துலாம்; காணிச் சுமான ஆதாயம், உறவினர் நன்மை, பாராட்டு.

விருச்சிகம்: அறிமுகங்களால் துயர், தொழிற் பிணக்கு, மனத்துயர்.

தனுசு: நற்காரியம், சாஸ்திரஞானம் அறிஞர் சந்திப்பு.

மகரம்: உறவிற் விரிசல், அதிகாரிகள் கண்டனம், அகால உணவு.

கும்பம்: முயற்சிகளில் வெற்றி, நண்பர் சந்திப்பு, வாக்குசாதுரியம்.

மீனம்: சாமர்த்திய முடிவு, புதிய ஸ்தானம், அதிக பொறுமை.

— ஜோஸ்யர்.

அழிந்துபோன

வாழை மரங்கள் விபரம் சேகரிப்பு

(மாரும்பாணம்)

கில தினங்களுக்கு முன்னர் தொடர்ந்து பெய்த மழையினாலும், காற்றினாலும் அழிந்துபோன வாழை மரங்களின் விபரம் திரட்டப்படுகின்றது.

வாழைத் தோட்டங்களிலுள்ள வாழை மரங்களின் இழப்பிற்கே ஈட்டுத் தொகை வழங்கப்படுமென்பதனால் வாழைத்தோட்ட அழிவுகளை பெருமளவில் கணக்கிடப்பட்டு வருகின்றது. —158

இன்று

(ஆனைப்பந்தி)

பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொதுமுகாமை யாளர்களுக்கான "கலந்துரையாடல்" இன்று 10-ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். —101

0 0 0

(மாரும்பாணம்

காரைநகர் வாரிவளவு நூலியக்கச் சபை, ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் மாணவர்களை (20 பேர்) பாராட்டி பரிசில்கள் வழங்கும் வைபவம் இன்று காலை 11 மணிக்கு வடக்குகோட்டையில் இயங்கும் மாற்றான் கல்லூரியிலும் புதன் கிழமை காலை 11 மணிக்கு யாழ். ஐடியல் சங்கி நிலையத்தில் இயங்கும் வலாநிதி ஆ. தியாகராசா ம. ம வியிலும் நடைபெறும். —சி

★ யுத்தம் நிறுத்தப்படுமானால்

அழிவுக்குச் செலவிடும் பணத்தை அபிவிருத்திக்குச் செலவிடலாம்

(தொழும்பு)

இலங்கையில் பொருளாதார வளர்ச்சியில் இந்த வருடம் ஏதும் முன்னேற்றம் ஏற்படுமா என்பது பற்றி கூற இயலாதுள்ளது. ஏனெனில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் காலநிலை பாதுகாப்பு நிலைமை சர்வதேச அபிவிருத்தியாகிய வற்றிலேயே தங்கியுள்ளது'' இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' தனது பொருளாதார ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது;

1994 ஆம் ஆண்டு, நாடு சமாதானத்தையும் நல்ல ஆட்சியையும் கொண்டு வருமாயின் பொருளாதாரம் மிளிரும். வடகிழக்கில் தற்போது நடைபெற்று வரும் போர் நிறுத்தப்படுமாயின் அழிவுக்காக செலவு செய்வதை ஆக்கபூர்வமான அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம்.

அதுமாத்திரமல்ல சர்வதேச உதவிகள் வடகிழக்கு மீள்குடியமர்தலுக்கும் தொழிற்சாலைகள், விவசாய அபிவிருத்திஞ்களுக்கும் கிடைக்கும் மேலும் நாட்டில் முதலீடு செய்வதற்கு சர்வதேச ரீதியில் நம்பிக்கை பிறக்கும் உல்லாசப் பிரயாணிகள் வருகை அதிகரிப்பதோடு நாட்டில் மீன் உற்பத்தி அதிகரிக்கும் இதனால் வடகிழக்கு அபிவிருத்தி மாத்திரமல்ல சகல விதத்திலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் நாட்டு மக்கள் சமாதானத்தின் மூலம் பெறும் இத்தனை நன்மைகளையும் சண்டைக்காரரும் இந்த சிறு சச்சரவை முடிவுக்கு கொண்டு வர விரும்பாதோரும் தடுத்து வருகின்றனர்.

உண்மையில் நாட்டில் சமாதானம் நிலவுமாயின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டு 10 வீத வளர்ச்சி ஏற்பட்டு சமூக பொருளாதார இலக்கை நாம் காணலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (வே-சி)

'தொண்டா' முடிவை மாற்றவேண்டும்

(கொழும்பு)

மத்திய மாகாண சபை உறுப்பினர் 8 பேரும் ராஜினாமாச் செய்யவேண்டும் என்றனது நிலைப்பாடிலிருந்து திரு. தொண்டமான் விடுக்கொடுக்காவிட்டால் இதொகாவினால் சமாதான சூழ்நிலை ஏற்படக் கூடிய எந்த வாய்ப்பும் இல்லையென எம்பிப் பொதுச்செயலாளர் திரு. செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் திரு. தொண்டமான் விட்டுக் கொடுத்து கட்சியின் நலனைப் பேணவேண்டுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை இதொகாவின் கொள்கைகளை மக்களின் நலன் கருதி அமுல் படுத்துவதில் தான் பின் நிற்கப்போவதில்லை என கட்சித் தலைவர் திரு. எஸ். தொண்டமான் கூறியுள்ளார். (சி)

மாவுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணெண்ணை, உணவுப் பொருட்கள் தவிர ஏனைய பொதிகள் விவசாயப் பொருட்களுடன் மேலும் மூன்று கப்பல்கள் அடுத்தடுத்து பருத்தித்துறை துறைமுகம் வரவுள்ளதாகவும் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன (160 – 158 - சி)

சுப்பர் சொனிக், புக்காரா நள்ளிரவில் ரோந்து

(எழுதுமட்டுவாள்)

வடமராட்சி கிழக்குப் பகுதியான வட்டக்கச்சி, செம்பியன்பற்று உட்பட பல பகுதிகளிக் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12-40 மணியளவில் புக்காரா விமானம் தாழப்பறந்து வலம்வந்துள்ளது.

இதேவேளை இப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு சுப்பசொனிக் விமானம் வட்டமிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவைமட்டுமல்ல இப்பகுதியில் இரவு வேளைகளில் பெரும் பதற்றம் நிலவுகிறது. (170-சி)

★ 'மாலோ'வில்

75 பயணிகளுடன் சடலமும் வந்தது

(நெல்லியடி)

திருமலையிலிருந்து புறப்பட்ட 'மாலோ' கப்பலில் 75 பயணிகளும் நேற்று பருத்தித்துறை துறைமுகம் வந்து சேர்ந்தனர்.

இக்கப்பலில், கொழும்பில் வைத்திய சிகிச்சைக்கு சென்று அங்கு மரணமான ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரான வல்வெட்டித்துறை வடக்கை சேர்ந்த மார்க்கண்டு தம்பிராசா (வயது 60) என்பவரது சடலம் பிரேதப்பெட்டியில் அடைக்கப்பட்டு கொண்டு வரப்பட்டது.

மாலோ கப்பல் அடுத்த சில தினங்களில் திருமலை திரும்பும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (160-158-சி)

கொலரா, மலேரியா நேற்றும் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொலராவினால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த அராலியைச் சேர்ந்த கதிரையர் சின்னத்துரை (வயது 60) என்பவர் நேற்று மரணமானார்.

இவரின் சடலம் சுகாதார பரிசோதகரின் உதவியுடன் நேராக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இதேவேளை மலேரியாவினால் பீடிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த கொழும்புத்துறை மணியம் தோட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்டியன் மெட்லடா (வயது 41) என்ற பெண் நேற்று மரணமானார். (சி)

மரண அறிவித்தல்

மார்க்கண்டு தம்பிராசா

(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

வட்டு-வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டு தம்பிராசா (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்) 06-01-94ல் கொழும்பில் காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுஜேந்திரன், யோகேந்திரன் (ஜேர்மனி), குகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் 10-01-94 (இன்று) திங்கட்கிழமை ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழக்கைவேறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு-வடக்கு,
சித்தங்கேணி.
(சி 710)

தகவல்:
த. மகேஸ்வரி
(மனைவி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered a ua News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B

★ எயிட்ஸைப் போன்று

மற்றுமொரு மர்ம நோய் அமெரிக்கா எங்கும் பரவுகிறது

(வாஷிங்டன்)

'எய்ட்ஸ்' நோயைப் போன்று மற்றொரு மர்மநோய் அமெரிக்காவில் பரவிவருவதாக அமெரிக்காவில் ஒட்லாண்டா நகரிலுள்ள நோய்க் கட்டுப்பாட்டிற்கான அமெரிக்க மையம்' எச்சரித்துள்ளது.

இனம் காணாத இந்த நோயால் இது வரை அமெரிக்காவில் பத்திற்கும் மேற்பட்டோர் இறந்து விட்டனர். இந்த மர்ம நோயால் பாதிக்கப்பட்டவர்களை ஆராய்ந்த போது அவர்களது உடலில் 'எயிட்ஸ்' வைரஸ் இருப்பதற்கான அறிகுறியே இல்லையாம்.

இதுவரையில் கண்டறியப்படாத வைரஸ் ஏதாவது இந்த மர்ம நோய்க்கு காரணமாக இருக்குமா என்பது குறித்த அமெரிக்காவில் பல ஆய்வு கூடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது இந்த நோய்க்கு புதிய வைரஸ் ஏதாவது இனம் காணப்படலாம் எனவும், அப்படிப் புதிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டால் இரத்தப் பரிசோதனை முறையும் உடன் ஆரம்பிக்கப்படும் எனவும் அந்த மையம் தெரிவித்துள்ளது. (சி)

கதவி கேட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டன. இவற்றைக் கண்ட பல பெற்றோரும், பொதுமக்களும் ஆத்திரம் மேலிட்ட நிலையில் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த சோக நிலை மிகவும் துயரமானதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

சிறு பிள்ளைகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடத்திலாவது புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தை உறுதிப்படுத்தியுள்ளதாம்.

எம்பிவிப்பிட்டிய சிறுவர்களின் விதியும் இந்தப்பிள்ளைகளின் பெற்றோரின் நீண்ட கால சட்டரீதியிலான போராட்டமும் உள்நாட்டிலும் வெளியுலகிலும் தொடர்ந்தும் கவனத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்த உண்மைகளை வெளிக்கொண்டு வர பத்திரிகைகளும் வெளிநாட்டு அழுத்தங்களாலும்மட்டுமே முடியுமெனவும் நம்பப்படுகிறதாம். (சி)

சூரியகந்த பயங்கரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடி ஆழத்திற்கே கிடங்கு வெட்டப்பட்டு 20 எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டன. பெருமளவு எலும்புக்கூடுகள் கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையிலேயே எடுக்கப்பட்டன. மண்டையோடுகள், இன்றும் சதை ஒட்டிக்கொண்டிருக்கும் சில எலும்புகள் இன்னும் சிவரத்தால் கறை படிந்த துணிகளால் கற்றப்பட்டிருக்கும் எலும்புக்கூடுகள் என மனித சடலங்களின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது குறித்த விசாரணை இன்று ஆரம்பமாகவுள்ளது கிடங்குகள் தோண்டும் வேலையும் தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது.

மேலும் இப்புதை குழியை தோண்டினால் 300 வரையிலான எலும்புக் கூடுகளை மீட்கலாம் என எதிர்க்கட்சியினர் கூறியுள்ளனர். (சி)

காவல் பணிமனை மாங்குளத்தில் திறப்பு

(வவுனியா)

வன்னி மாவட்டத்தின் 4வது காவல்பணிமனை நேற்றுகாலை 7-15 மணியளவில் கிளிநொச்சி கோட்டத்தில் உள்ள மாங்குளத்தில் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி திறப்பு விழாவில் வன்னி மாவட்ட விசேட தவபதி திரு. ரவி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். காவல்துறைக் கொடி காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா.நடேசனால் ஏற்றிவைக்கப்பட்டது.

தமிழ்ஈழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா ஜகிளவிளக்கை ஏற்றிவைத்தார். பின்னர் திரு. ரவி நாடாவை வெட்டி மேற்படி பணிமனையை திறந்துவைத்தார்.

இந்தநிழ்வில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் வந்து கலந்து கொண்டனர். (க-சி)

இராணுவ தரப்பில் புதிய மாற்றங்கள்

(கொழும்பு)

இராணுவ கட்டமைப்பில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இராணுவத்திற்குள்ளும் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் கொழும்பிலிருந்து வெளிவரும் 'தினமுரசு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

புதிய இராணுவ தளபதியாக லெப். ஜெனரல் ஜெரிடி கிரிவர பதவியேற்றலைத் தொடர்ந்தே இப்புதிய மாற்றங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

பதவி உயர்வுகள், பதவி மாற்றங்கள், இடமாற்றங்கள் என பலவகை மாற்றமும் இராணுவத்திற்கு புதிய பயிற்சி வழங்கும் நிலையங்களும் அமுல் படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

அரச படையினரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திய தாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறியுள்ளனர்

இது பற்றி பி. பி. ஸி கூறுகையில்; மேல் கட்டங்களுக்குள் மறைந்து செல்லும் பகுமக்கள் ஒன்றினருமே இலங்கையின் தன்மையமான கடந்த கால வரலாற்றில் வன்முறை நிகழ்வுகள் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

1980ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் செயல்பட்டு வந்த மரண அதிரடிப்படைகளுக்கு பலிய னவர்களின் மயானமாக இந்த இடம் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

இந்த மரண அதிரடிப்படையினர் இப்பகுதிகளில் திரிந்த அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்த தீவிரவாத குழுவின் உறுப்பினர்களையும் அவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார்க சந்தேகப்படும் எவரையும் கொன்று குவித்து புதைத்துள்ளனர். (சி)